## 2.29 ஊரக வளர்ச்சி இயக்ககத்தில் பணிபுரியும் உதவி இயக்குநர் நிலையில் உள்ள அலுவலர்கள் வகிக்கும் பெயர் மற்றும் பதவி

ஊரக வளர்ச்சி ( இ 1) துறை

அரசாணை (நிலை) எண்.23 நாள் 12.2.2004

படிக்க :

ஊரக வளர்ச்சி இயக்குநர் கடிதம் ந.க.1020/04/நிதி 1.1. நாள்.2.1.2004.

**ஆணை**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி இயக்குநர், ஊரக வளர்ச்சி இயக்ககத்தில் தற்போது ஏழு கூடுதல் இயக்குநர்கள் மூன்று இணை இயக்குநர்கள் மற்றும் ஏழு உதவி இயக்குநர்கள் பணியிடங்கள் உள்ளன என்றும் அதே சமயம் தற்போது ஊரக வளர்ச்சித் துறை கேட்பு எண்.40 மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களில் சில, இதர திட்டங்களுடன் இணைந்து திட்டங்களில் பெயர் மாற்றம் பெற்று செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் எனவே, ஊரக வளர்ச்சி இயக்ககத்திற்காக தோற்றுவிக்கப்பட்ட மேற்காண் அலுவலர்களின் பதவி பெயர்களில் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டி உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். ஊரக வளர்ச்சி இயக்குநர் மேலும் தெரிவிக்கையில் தற்போது ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டம் மற்றும் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் ஆகிய இரு திட்டங்களும் இணைந்து சம்பூர்ண கிராமின் ரோஜ்கார் யோஜனா என்ற திட்டமாக மாற்றப்பட்டுள்ளதால் இணை இயக்குநர் (வே.வா.உ.தி.) மற்றும் உதவி இயக்குநர் (ஜே.வி.வி.டி) என்ற இரு பணியிடங்களும் முறையே இணை இயக்குநர் (ச.கி.ரோ.யோ) மற்றும் உதவி இயக்குநர் (சம்பூர்ண கிராமின் ரோஜ்கார் யோஜ்னா) என்று பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டியுள்ளது என்றும், மேலும் டிரைசம் திட்டம் தற்போது ஸ்வர்ண ஜெயந்தி ஸ்வரோஸ்கார் யோஜ்னா என பெயர் மாற்றம் பெற்றுள்ளதால், கூடுதல் இயக்குநர் (டிரைசம்), உதவி இயக்குநர் (ஒ.ஊ.வ.தி) (IRDP) என்ற பதவி பெயர் கூடுதல் இயக்குநர் (SGSY) மற்றும் உதவி இயக்குநர் (SGSY) என மாற்றம் செய்யப்பட வேண்டியுள்ளது என்றும் தெரிவித்து பெயர் மாற்றம் செயற்குறிப்பு அளித்துள்ளார்.

2. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்து, ஊரக வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை ஏற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது. அதன்படி, ஊரக வளர்ச்சி இயக்ககத்தில் பணிபுரியும் கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் நிலையில் உள்ள அலுவலர்கள் வகிக்கும் பதவி பெயர்களை பின்வருமாறு மாற்றம் செய்து அரசு ஆணையிடுகிறது.

| வ.எண் | | |
|---|---|---|
| 1. | கூடுதல் இயக்குநர் (டிரைசம்)<br>Additional Director (TRYSEM) | கூடுதல் இயக்குநர் (SGSY)<br>Additional Director (SGSY) |
| 2. | கூடுதல் இயக்குநர்<br>(குடி நீர் வழங்கல்)<br>Additional Director<br>(Water Supply) | கூடுதல் இயக்குநர்<br>(முழு சுகாதார இயக்கம்)<br>Additional Director<br>(Total sanitation Campaign) |
| 3. | இணை இயக்குநர் (EAS)<br>Joint Director (EAS) | இணை இயக்குநர் (SGRY)<br>Joint Director (SGRY) |
| 4. | உதவி இயக்குநர் (JVVT)<br>Assistant Director (JVVT) | உதவி இயக்குநர் (SGRY)<br>Assistant Director (SGRY) |
| 5. | உதவி இயக்குநர் (IRDP)<br>Assistant Director (IRDP) | உதவி இயக்குநர் (SGSY)<br>Assistant Director (SGSY) |

(ஆளுநரின் ஆணைப்படி)

**சாந்தா ஷீலா நாயர்**
அரசு செயலாளர்